# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 09.09.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

உண்மை என்பது எத்தகையது எனில் மார்க்கத்தை உடையவர் மட்டுமின்றி மார்க்கமே இல்லாதவர் கூட இந்த உயர் நல்லொழுக்கத்தைப் பேண வேண்டும் என்று தனது தரப்பிலிருந்து கூறுகிறார். ஆனால் இவ்வாறு கூறிய பிறகும் கூட உண்மையை சரிவர கடைபிடிப்பதில்லை. வாய்ப்பு கிடைத்தால் சுயநலத்திற்காக பொய்யின் துணை தேவைப்படுகிறது. மனிதனின் சொந்த வாழ்விலிருந்து சர்வதேச தொடர்புகள் வரை எல்லா இடங்களிலும் உண்மை என்ற நல்லொழுக்கப் பண்பை பேண வேண்டும் என்று எவ்வளவு கடுமையாக கூறப்படுகிறதோ அந்த அளவுக்கு சந்தர்ப்பம் வரும் போது மறுக்கவும் செய்கிறார்கள். தனது சுயநலத்திற்காக அன்றாட சாதாரண வாழ்விலும் கூட பொய்யின் துணை தேவைப்படுகிறது. கவ்லே ஸதீத் என்று அழைக்கப்படுகின்ற உண்மை மறுக்கப்படுகிறது. தொழில் விவகாரங்களில் உலகின் பெரும்பகுதி பொய்யையே துணைக்கு எடுத்துக் கொள்கிறது. சமூகத் தொடர்புகளில் பெரும்பாலும் பொய் உதவிக்கு அழைக்கப்படுகிறது. அரசியலில் உண்மையின் இரத்தம் சிந்தப்படுகிறது. நாடுகளுக்கு இடையிலும் இதுவே பெரும்பாலும் காணப்படுகிறது. பொதுவாக மார்க்கங்கள் முழுக்க முழுக்க உண்மையை பரப்புபவை ஆகும். இதிலும் கூட சுயநலத்தை வணங்குபவர்கள் பொய்யைக் கலக்க முயற்சி செய்கின்றனர். உண்மையை எப்படி மறைப்பது? உண்மையின் அடையாளமே இல்லாமல் ஆக்குவது எவ்வாறு? என்று முயற்சி செய்கின்றனர். பொய்யை அழுத்தமாகக் கூறினால் அது உண்மையாகி விடும் என்று சிலர் உறுதி கொள்கின்றனர். அதனால் உண்மை பொய்யாகி விடும்; பொய் உண்மையாகி விடும் என்று நினைக்கின்றனர்.

இந்த இறையச்சமின்மை, தூய்மையின்மை உருவாகக் காரணம் இறைவன் மீது இவர்களுக்கு நிச்சய உறுதி இல்லை. இறைவன் மீது உறுதி இருந்தால் பொய்யை இப்போது துணைக்கு எடுப்பது போன்று எடுக்கப்பட்டிருக்க மாட்டாது. சொந்த வாழ்க்கையில் விரும்பத்தகாதவை ஏற்படக் காரணம், வீடுகளில் உண்மையைப் பயன்படுத்தாமை ஆகும். உண்மையை வெளிப்படுத்தாததால் கணவன், மனைவியை நம்புவதில்லை. மனைவி, கணவனை நம்புவதில்லை. பெற்றோர் பல நேரங்களில் பொய் சொல்வதை குழந்தைகள் பார்க்கின்ற போது குழந்தைகளிடமும் பொய் சொல்லும் பழக்கம் ஏற்படுகிறது. குழந்தைகள் பல தவறான காரியங்களில் விழுந்து விடுகிறார்கள். காரணம் வீட்டிலுள்ள பொய் இவர்களை பொய்யில் வளரச் செய்கிறது. தெரிந்தோ தெரியாமலோ வருங்கால சந்ததிகளிடம் உண்மையின் மீது கண்ணியம் உருவாவதற்குப் பதிலாக சில வீடுகள் அந்த உண்மையை போக்கி விடுகின்றன. இவ்வாறு குழந்தைகளை அழித்துக் கொண்டிருக்கின்றனர்.

எஞ்சிய சமூகத் தொடர்புகளின் நிலையும் இதுதான். அதே போன்று தொழில்துறையின் பொய்கள், துரதிஷ்டவசமாக இஸ்லாமிய நாடுகளிலேயே இந்த நோய் அதிகமாக உள்ளது. உண்மை சத்தியம் என்று எந்த அளவுக்கு ஆர்ப்பாட்டம் செய்யப்படுகிறதோ அந்த அளவுக்கு செயல் அளவில் மறுக்கப்படுகிறது. அதேபோன்று நாட்டு அரசியல் இங்கு பொய்யையே துணைக்கு எடுத்துக் கொள்கிறது. ஆனால் முஸ்லிம் நாடு என்று தங்களை அழைத்துக் கொள்ளும் நாடுகளுக்கு உண்மையில் நிலைநிற்கவும் பொய்யை வெறுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எந்த அளவு மிகவும் அழுத்தமாக வழிகாட்டப்பட்டுள்ளதோ அதே அளவு பொய் துணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

கடந்த நாட்களில் பாகிஸ்தானில் கராச்சி மற்றும் சிந்து பகுதிகளின் நிலைமையை ஓர் அரசியல்வாதி தமது மக்கள் மீது கோபம் கொண்டவாறு அந்தரங்க விஷயங்களை விளக்கினார். சில அரசியல்வாதிகளும் விமர்சகர்களும், இவ்வாறு உண்மையை வெளிப்படுத்துவது அரசியல்வாதிகளின் வேலை அல்ல என்றும்

விமர்சித்தனர். அரசியல்வாதி உண்மை கூற வேண்டும் என்று எதிர்பார்க்கவும் இல்லை. இவர் கூறுகிறார். எனவே இவர் அரசியல்வாதியல்ல. இவர் பைத்தியக்காரராகி விட்டார் என்கின்றனர். அவர் எடுத்துக் கூறிய குற்றச்சாட்டுகள் மறுக்கப்படவில்லை. மாறாக இவர் உண்மையைக் கூறுகிறார். எனவே இவர் பைத்தியம் என்று விமர்சிக்கப்படுகிறது.

விமர்சகர்கள் இவ்வாறு கூறுகின்றனர்: அரசியல் வாழ்வு மற்றும் தமது தனித்தன்மையை இவர் அழித்துக் கொள்கிறார். இதனை ஒரு பைத்தியம் தான் செய்ய முடியும். இவர்களின் பார்வையில் உண்மையும் சத்தியமும் அழிவுக்கு காரணமாகி விட வேண்டும். இதுவே இவர்களின் நிலையாகும். இவர்களின் பார்வையில் அரசியலும் ஆட்சியும் இறைவார்த்தையை விட மேலானது. அல்லாஹ்வும் ரஸூலும் பொய் சொல்லாதீர்கள் என்கின்றனர். ஆனால் இவர்கள் அரசியல் மற்றும் ஆட்சிக்காக பொய் சொல்லுங்கள்; சொல்லா விட்டால் நீங்கள் தவறு செய்தவர்கள் ஆவீர்கள் என்று கூறுகின்றனர். இதற்குப் பிறகும் கூட இவர்கள் உறுதியான முஸ்லிம்கள் ஆவர். ஆனால் அஹ்மதிகள் முஸ்லிம் அல்லாதவர்கள் ஆவார்கள் என்று கூறுகின்றனர். உண்மைக்காக தமது தொழில்களை, பெருமைகளை, உயிர்களை அழிவில் போடுகிறார்கள். இதற்குக் காரணம் அஹ்மதிகள் ஓரிறைவனை வணங்குபவர்களாவர். இறைவன் பொய் ஒரு ஷிர்க் ஆகும் என்று கூறியுள்ளான். அவர்கள் ஒரு நபியை ஏற்றவர்கள் ஆவர். அவர் மீது இறுதி ஷரீஅத்தாகிய திருக்குர்ஆன் இறங்கியது. எல்லா தீமைகளின் வேரும் பொய் என்பது அவர்களின் கூற்றாகும்.

பிறகு, சர்வதேச அரசியலை எடுத்துக் கொண்டால், அதில் முஸ்லிம் அரசுகளாயினும் சரி மேற்கத்திய அரசுகளாயினும் சரி இவர்கள் அனைவரின் நிலையும் ஒன்றுதான். இந்த நாடுகள் தமக்குள் உள்ள தொடர்புகளில் பொதுவாக உண்மையைப் பேசுகின்றனர். அவற்றில் ஓரளவு உண்மையும் உள்ளது. ஆனால் மற்ற நாடுகளின் விஷயத்தில் அல்லது முஸ்லிம் நாடுகளின் விஷயத்தில் இவர்களின் கொள்கையே மாறி விடுகிறது. இவர்கள் முதலில் ஈராக்கை தாக்கியதிலிருந்தே அது தெரிய வந்தது. சதாம் உசேனை கொல்வதற்காக ஈராக்கையே அழித்தனர். அவர்களின் செல்வங்களைக் கைப்பற்றினர். பிறகு எங்களிடம் தவறு ஏற்பட்டு விட்டது என்றனர். எவ்வளவு அநீதி, சூழ்ச்சி, பயங்கர ஆயுதங்கள் ஆகியவற்றின் மூலம் உலகை அழிக்கவும் அண்டை நாட்டை அடிமைப்படுத்தி விடவும் சதாம் உசேன் நினைக்கிறார் என்று எங்களுக்கு செய்தி கிடைத்ததோ அந்த அளவிற்கு அங்கிருந்து எதுவும் கிடைக்கவில்லை என்று கூறி விட்டனர். பிறகு லிபியா மீது குறி வைக்கப்பட்டது. தவறான செய்திகள் கிடைத்து விட்டன என்று இப்போது கூறுகின்றனர். அந்த அளவுக்கு பொது மக்கள் மீது பெரும் அநீதிகள் அங்கு நடக்கவில்லை என்றும் கூறுகின்றனர். இவையெல்லாம் மேற்கத்திய நாடுகளின் ஊடகங்கள் செய்தியைப் பரப்புகின்றன. முதலில் பொய் பிரச்சாரம் செய்து தாக்குதல் தொடுக்கப்படுகிறது. பிறகு உண்மையாளர் ஆவதற்காக தமது ஊடகங்கள் மூலம் எங்களுக்கு தவறு ஏற்பட்டு விட்டது. எவ்வளவு விஷயங்கள் அங்கு நடப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்ததோ அந்த அளவுக்கு அவைகள் நிரூபிக்கப்படவில்லை என்கின்றனர். உண்மையில் அவர்கள் உண்மை கூறுவதும் கூட பொய்யை மறைப்பதற்காகவே ஆகும். நோக்கமோ (அந்த) நாட்டின் வளங்களை அபகரிப்பதே ஆகும். அது நடந்து விட்டது. ஆனால் அதற்கான வாய்ப்பையும் கூட முஸ்லிம்களே ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். நூற்றுக்கணக்கான பில்லியன் டாலர்கள் நாட்டின் செல்வம் பொதுமக்களின் நலனுக்காக செலவு செய்திருந்தால் நாட்டுக்குள் இவ்வளவு குழப்பத்தை ஒருபோதும் உருவாக்கி இருக்காது. அவ்வாறே அவர்களுக்கு பிரச்சனையில் தலையிட துணிச்சலும் ஏற்பட்டிருக்காது. எவ்வாறிருப்பினும் இக்கருத்தின் சாராம்சம் சர்வதேச அளவில் பொய் கூறுதல், உண்மையை மறைப்பது மட்டுமல்ல. பிறர் உடைமையை அபகரிப்பதில் எல்லா நாடுகளும் தத்தமது பங்கை செய்கின்றன. நாம் தப்பி விடுவோம் என்று நினைக்கின்றனர். உலகில் தப்பித்து விட்டாலும் கூட ஒரு வருங்காலம் உள்ளது. அதனை சந்திக்க வேண்டியதுள்ளது. மறு உலகம் உள்ளது. அதில் எல்லா கணக்கும் தர வேண்டியதுள்ளது. பிறகு இந்த உலகத்தோடு முடிவதில்லை. நாம் பார்க்கிறோம். மார்க்கத்தின் பெயரால் மார்க்கத்தின் கொடியை உயர்த்துகிற இந்த பெயர் தாங்கிகள் உண்மையை மறுக்கின்றனர். பொய்யிற்கு முன்னுரிமை வழங்குகின்றனர். இதில் இஸ்லாமிய எதிரி சக்திகளும் அடங்கும். இவர்கள் இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் ஆவர். இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் எதிரிகளும் ஆவர். இவர்களுள் முஸ்லிம்களும் அடங்குவர். இவர்களும் இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகளின்

வேலையைச் செய்கின்றனர். சத்தியத்தை அறிகின்றனர். ஆனால் தமது சொந்த பலனுக்காகவும் சொற்பொழிவு மேடைகளுக்காகவும் பொய்யை துணைக்கு எடுக்கின்றனர். பொதுமக்களின் மனதில் நஞ்சை விதைப்பதற்கு ஒருவர் மற்றவரை முந்துகின்றனர். அவர்களுள் பலர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்கள் மற்றும் ஜமாஅத்தின் நூல்களைப் படித்து விட்டு தர்ஸ் கொடுக்கின்றனர். சொற்பொழிவாற்றுகின்றனர். அதுவன்றி இவர்களிடம் இஸ்லாமிய எதிரிகளின் வாயை அடைக்க எந்த ஆதாரமும் இல்லை. படைப்புகளும் இல்லை. இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மட்டும் தான் இஸ்லாத்தின் தற்காப்பை மிகவும் உன்னதமான முறையில் மறுக்க முடியாத ஆதாரத்துடன் செய்துள்ளார்கள். ஆனால் பொதுமக்களை ஏமாற்றுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி, பொய்யர் (நவூதுபில்லாஹ்) என்று கூறுகின்றனர். இதனை ஏற்கனவே நானே ஒருமுறை கூறியுள்ளேன்.

ஒருவர் கூறினார்: ஓரிரு முறையல்ல. டி.வி.யில் சொற்பொழிவாற்றுபவர்களில் பல உலமாக்களின் வீடுகளில் தப்ஸீரே கபீர் மற்றும் பல நூல்கள் இருப்பது பார்த்துள்ளேன். அதுவும் ஆட்சேபனை செய்வதற்காக அல்ல; குறைகளை சுட்டிக் காட்டுவதற்காக அல்ல. மாறாக அந்தக் கருத்துக்களை அறிந்து தமது தர்ஸ்களில் அதனை கூறுவதற்காக வைத்துள்ளனர். இவர்களுக்கு இஸ்லாத்தின் மேன்மையை நிரூபித்துக் காட்டுவதில் எந்த ஆர்வமும் இல்லை. இவர்கள் பொதுமக்களுக்கு நேர்வழியை கண்டறிய சரியான வழிமுறையைக் கூறப்போவதும் இல்லை. இவர்கள் சொற்பொழிவு மேடைகள் தம்மை விட்டுப் போய் விடுமோ என அஞ்சுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் இது இவர்களின் முயற்சிகள் ஆகும். ஆனால் இறைவன் ஒவ்வொரு காலத்திலும் தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அனுப்பும் போதும் அவர்கள் இந்த முயற்சிகளை செய்து கொண்டுதான் இருக்கின்றனர். ஆனால் இறை நியதி மிகைத்து நிற்க வேண்டும். எனவே எப்போதும் இறைவன் உலகில் நபிமார்களை அனுப்பி வந்துள்ளான். பொய் அதன் எல்லையைத் தொடும் போது, குழப்பம் அதன் எல்லையைத் தொடும் போது, சத்தியம் அழியும் போது அல்லாஹ்வின் நபிமார்கள் வருகின்றனர். உண்மையை மீண்டும் உலகில் நிலைநாட்டுகின்றனர். மேன்மேலும் வளர்கின்றனர். அவர்களின் வழியில் எதிரிகள் இலட்சக்கணக்கான தடைகளை ஏற்படுத்தினாலும் அல்லாஹ்வின் நியதியே மிகைத்து நிற்கிறது.

அல்லாஹ்வின் நியதி இந்த நபிமார்களுக்கு உதவி செய்கிறது. மலக்குகள் ஆதரவாக நின்று அவர்களுக்கு உதவி செய்கின்றனர். இதுவே இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் அளித்த வாக்குறுதியாகும். அல்லாஹ்வின் அருளால் இறைவன் அதனை நிறைவேற்றிக் கொண்டே செல்கிறான். அவர்கள் மாநாடு நடத்துகின்றனர். பிரசுரம் வெளியிடுகின்றனர். அநீதியிழைக்கின்றனர். அதோடு செப்டம்பர் 7 ஆம் தேதி பாகிஸ்தானில் மாநாடு நடந்தது. ரப்வாவிலும் மாநாடு நடந்தது. அதற்கு அவர்களுள் பிரபல உலமாக்கள் வந்தனர். மாநாட்டிற்கு தாஜ் தாரே கத்மே நுபுவ்வத் கான்ஃபரன்ஸ் என பெயர் வைக்கப்பட்டது. அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏசுவதையும் ஜமாஅத்திற்கு எதிராக புனைந்து கூறுவதையும் தவிர வேறு எதுவும் நடக்கவில்லை. முழு இரவும் அப்படியே வீணாக பேசி விட்டுச் சென்றனர். இவை அனைத்தும் அல்லாஹ், ரஸூலின் பெயரால் செய்தனர். இதுவே இவர்களின் நிலையாகும். இருந்தும்கூட இறைவனது நியதி இவ்வாறு செல்கிறது. அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் மேன்மேலும் வளர்ந்து கொண்டே தான் இருக்கிறது. அல்லாஹ் தனது வாக்குறுதியை நிறைவேற்றா விட்டால் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் வெற்றி பெறாவிட்டால் அல்லாஹ் தனது வாக்குறுதியில் தவறு செய்வதாக நிரூபணமாகி விடும். நவூதுபில்லாஹ். மார்க்கத்தின் மீது நபிமார்களின் மீது இறைவன் மீது உலகின் ஈமானே போய் விடும். எனவே அல்லாஹ் இந்த ஈமானை நிலைநாட்ட நல்லியல்பை அதிகரிக்க ஒரு காட்சியைக் காட்டுகிறான். அதனால் அவர்களின் ஈமான் ஒவ்வொரு வினாடியும் வலுப்பெறக் காரணமாகி விடுகிறது.

சில மார்க்கங்கள் முந்தைய உண்மைக் கதைகளைக் கூறி அம்மார்க்கத்தை ஏற்றுக் கொண்டவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றனர். இன்னும் சில மார்க்கங்கள் புத்தம்புது

சம்பவங்களைக் கூறி தமது மார்க்க நிறுவுனர் உண்மையானவர் என்று கூறி மக்களை ஈர்க்கின்றனர். சிலர் ஈர்க்கப்படுகின்றனர். சிலருக்கு அல்லாஹ் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியாரைக் குறித்து அறிவித்துக் கொடுத்து வழிகாட்டுகின்றான். சுருக்கமாக தமது தேர்ந்தெடுக்கப்பட்டவரின் உண்மையைப் பற்றி – நபிமார்களின் உண்மையைப் பற்றி அந்த நபியின் வாழ்நாளிலேயே மக்களின் கவனத்தை அவர் பக்கம் திரும்பச் செய்கின்றான். சிலர் பிற்காலத்தில் மார்க்கத்தின் வளர்ச்சியைக் கண்டு – ஏற்றுக் கொண்டிருப்பவர்களின் செயல்பாடுகளைக் கண்டு – நபியுடன் இருக்கும் ஜமாஅத்தைக் கண்டு இறைவனது வழிகாட்டுதல்களைப் பெற்று நேர்வழி பெறுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையின் மீது ஆய்வு செய்யும் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அக்காலத்தின் மறுப்பாளர்கள் கூட ஸித்தீக், அமீன் (உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர்) என்ற பெயரிலேயே அறிந்திருந்தனர். இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மையாகும். அவர்கள் மக்காவின் தலைவர்கள் மற்றும் தமது உறவினர்களை ஒன்றுகூட்டி இந்த குன்றின் பின்னால் ஒரு படை மறைந்துள்ளது என்று சொன்னால் உங்களுக்கு அது தெரியா விட்டாலும் நம்புவீர்களா? என்று கேட்டார்கள். வெளிப்படையாகப் பார்க்கும் போது அது சாத்தியமில்லாதது. அவர்களின் பின்னால் ஒரு படை மறைந்திருந்து கண்ணுக்குத் தென்படாமலே போய் விடுவது சாத்தியமற்றது. ஆனால் எல்லாரும் ஒரே குரலில் கூறினார்கள். முஹம்மதே (ஸல்) நீர் ஒருபோதும் பொய் சொன்னதில்லை. எனவே நாம் ஏற்றுக் கொள்வோம். பிறகு அன்னார் அவர்களுக்கு தப்லீக் செய்தார்கள். ஆனால் அவர்கள் உலகியல்வாதிகள் ஆவர். கல் மனம் கொண்ட அவர்களிடம் எந்த தாக்கமும் ஏற்படவில்லை. அவர்களின் முடிவும் தீயதாகவே ஆனது. அவர்களுள் சிலர் பின்னர் முஸ்லிம்களாயினர். எவ்வாறிருப்பினும் நபிமார்கள் தமது சத்தியத்தினாலேயே உலகை தம் பக்கம் அழைக்கின்றனர். திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது தப்லீகை விளக்கியவாறு அந்த வார்த்தையை இறைவன் பதிவு செய்துள்ளான். ஃபகத் லபிஸ்த்து ஃபீகும் உம்ரம் மின் கப்லிஹ். அஃபலா தஃகிலூன் – இதற்கு முன்னரும் நான் உங்களுக்கு மத்தியில் நீண்ட காலம் வாழ்ந்துள்ளேனே? சிந்திக்கமாட்டீர்களா? (10:17) இது இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பற்றி அவன் தந்த சான்றாகும்.

நான் நீண்ட காலம் உங்கள் முன் இருந்துள்ளேன். ஒருபோதும் பொய் சொல்லவில்லை. இப்போது வயோதிகனும் ஆகப்போகிறேன். இனியா பொய் செல்வேன்? அதுவும் இறைவன் மீதா? அவனோ பொய்யை இணைவைப்பிற்கு சமமாகக் கூறியுள்ளான். அதுவும் எனது போதனையில் எழுதப்பட்டுள்ளது. நான் வந்ததே தவ்ஹீதை நிலைநாட்டத்தான். இதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய பதில் ஆகும். எனவே நபிமார்களின் தப்லீகிற்கு பெரும் காரணியும் ஆயுதமும் அவர்களின் உண்மையின் வெளிப்பாடே ஆகும். அவர்களின் வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும் உண்மை மின்னுகிறது. அதனைப் பார்த்து அவர்கள் தப்லீக் செய்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் இந்த இல்ஹாம் இறங்கியுள்ளது. ஒரு நீண்ட காலம் இருந்துள்ளேனே? உங்களுக்கு அறிவு இல்லையா? இது பற்றி நுஸூலுல் மஸீஹில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: கிட்டத்தட்ட 1882 –ல் அல்லாஹ் எனக்கு இந்த வஹியைத் தந்து சிறப்பித்தான். ஃபகத் லபிஸ்த்து ஃபீகும் உம்ரம் மின் கப்லிஹ். அஃபலா தஃகிலூன் – இதற்கு முன்னரும் நான் உங்களுக்கு மத்தியில் நீண்ட காலம் வாழ்ந்துள்ளேனே? சிந்திக்கமாட்டீர்களா? (10:17)

இதில் மறைவானவற்றை அறிந்த இறைவன் ஒரு விஷயத்தை சுட்டிக் காட்டியுள்ளான். எந்த எதிரியும் உமது வாழ்விலிருந்து எந்தக் குறையையும் எடுத்துக் காட்ட இயலாது. இந்த வகையில் எனக்கு இந்த 65 வயது வரை தொலைவில் இருப்பவரோ அருகில் இருப்பவரோ எனது கடந்த கால வாழ்வின் மீது எந்தக் குறையையும் நிரூபித்துக் காட்ட இயலாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதனை எழுதும் போது தனது வயதை குறிப்பிட்டார்கள். இன்னும் சொல்லப்போனால் எதிரிகளிடமிருந்தே தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் தூய்மை குறித்து சொல்ல வைத்தான். உதாரணமாக மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் மிகவும் அழுத்தமாக தமது இஷாஅத்துஸ் ஸுன்னா என்ற பத்திரிகையில் பலமுறை

எம்மையும் எமது குடும்பத்தையும் புகழ்ந்துள்ளார். இந்த மனிதர் இவரது குடும்பம் பற்றி என்னை விட அதிகமாக அறிந்தவர் வேறு எவரும் இல்லை என்று வாதிட்டும் கூறியுள்ளார். பிறகு நீதியின் கட்டுப்படுத்துதலால் தமக்கு தெரிந்ததை வெளிப்படுத்தியுள்ளார். மறுப்பின் அடிப்படையை நிறுவியவரான ஒரு மனிதர் ஃபகத் லபிஸ்து ஃபீகும் – உங்களிடமிருந்தே நான் வந்துள்ளேன் என்ற முன்னறிவிப்பை உண்மைப்படுத்தியுள்ளார்.

எனவே உண்மை எத்தகையது எனில் நபியின் உண்மைக்கு அது மிகப்பெரும் ஆதாரமாகும். எனவே தான் அல்லாஹ் நபிமார்களை நான் நீண்ட காலம் உங்கள் மத்தியில் இருந்துள்ளேனே? பொய் சொன்னதில்லையே? இப்போதா கூறுவேன்? என்று தனது அன்பிற்குரியவர்களின் சிறப்புப் பண்பாக குறிப்பிட்டுள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றிய ஒரு மேற்கோளை கேட்டீர்கள். அவர்களின் வாழ்க்கை பற்றி எதிரிகளும் கூட குறை கண்டுபிடிக்க இயலாது. உண்மையான வாழ்வின் மிக உயரிய அடையாளமாகும். இந்தக்கால மவ்லவிகள் நவூதுபில்லாஹ் பொய்யர் என்று கூறுவது போன்று அத்தகைய ஒரு மனிதரைப் பற்றி எவ்வாறு கூற முடியும்? ஆம். வாயினால் உளறிக் கொண்டுள்ளனர் தான். ஆனால் எதனையும் நிரூபிக்க இயலாது. இன்றும்கூட நல்ல நிய்யத்துடன் அல்லாஹ்விடம் உதவி கேட்டால் அல்லாஹ் அவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மையை நிரூபித்துக் காட்டியுள்ளான் என்றும், அவர்கள் எவ்வாறு இறைவனிடம் தூய்மையான முறையில் உதவி கேட்டு துஆ செய்தார்கள் என்றும் கூறினேன். இந்த உண்மையைத்தான் நபிமார்கள் கொண்டு வருகின்றனர். இதன் வெளிப்பாடு அவர்களின் வாழ்வின் ஒவ்வோர் அங்கத்திலும் ஏற்படுகிறது. இந்த உண்மையை தான் நாம் உலகில் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றிருப்பவர்கள் ஆவோம். ஏனெனில் நபிமார்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு தாம் ஏற்றுக் கொண்டவரின் உண்மையைப் பற்றி உலகிற்கு எடுத்துச் சொல்வது முக்கிய பணியாகும். பிறகு அவர்களை ஹிதாயத்தின் பக்கம் அழைக்க வேண்டும்.

இக்காலத்தில் இஸ்லாமே எல்லா உண்மைகளின் தலைமையமாக விளங்கும் இறுதி மார்க்கமாகும். இது ஒன்றே தனது போதனையை அதன் அசல் வடிவில் முன் வைக்கிறது. இது ஒன்றே இதுவரை இறைவனது வேதத்தை அதன் அசல் நிலையில் வைத்துள்ளது. கியாமத் வரை பாதுகாப்பாக இருக்கும். இது திருக்குர்ஆனின் வாதமாகும். அது உண்மை மற்றும் ஹிதாயத்தின் ஊற்றாகும். மற்ற எல்லா மார்க்க நூல்களிலும் கதைகள் பொய்கள் கலந்துள்ளன. எனவே இந்த உண்மையைக் கொண்டு உலகிற்கு ஒளியூட்டுவது ஒரு முஸ்லிமின் கடமையாகும். ஆனால் முஸ்லிம்களோ தாமே தவறான வேலைகளில் மூழ்கி உள்ளனர். நான் ஏற்கனவே விளக்கினேன். அவர்கள் உண்மையின் என்ன வழியைக் காட்டுவார்கள்? ஒரு சந்தர்ப்பத்தில் பெரும்பாலும் – பெரும்பாலும் என்ன முழுக்க முழுக்க கிறித்தவர்களைக் கொண்ட ஒரு சபையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு தூதுச் செய்தியைக் கொண்டு வந்துள்ளார்கள். அந்த தூதுச் செய்தி உலகினர் அனைவருக்கும் முஸ்லிம்களுக்கும் கிறித்தவர்களுக்கும் பொருந்தும். நல்லியல்பு கொண்ட கிறிஸ்தவர்களானாலும், இந்துக்களானாலும் இன்ஷா அல்லாஹ் அவர்களின் கையில் ஒன்றுசேர்வார்கள் என்று நான் பேசிக் கொண்டிருந்த போது ஒரு கிறித்தவர் மார்க்கத்துடன் கணிசமான தொடர்புள்ளவர் கூறினார். முதலில் முஸ்லிம்களை சீர்திருத்துங்கள். பிறகு கிறித்தவர்களை திருத்துங்கள். எவ்வாறிருப்பினும் அப்போது அதற்கு நான் பதில் கொடுத்தேன். எனினும், முஸ்லிம்கள் சீர்திருந்ததுவது மிக அவசியம் என்பது உண்மையாகும். முஸ்லிம்களின் காரணத்தினாலேயே பல நேரங்களில் வெட்கப்பட வேண்டியுள்ளது.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முஸ்லிம்களை சீர்திருத்த வேண்டும் என்பதற்காகவே வந்துள்ளார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு கட்டளையிட்டார்கள். இமாம் மஹ்தி வந்தால் அவரை ஏற்க வேண்டும். இதற்காக பனி மலைகளில் சென்று ஒப்புக் கொள்ள நேர்ந்தாலும் சரியே என்று கூறியுள்ளார்கள். ஆனால் அஹ்மதிகளாகிய நாம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மையான பேரன்பரின் ஜமாஅத்தில் இருப்பதாக வாதிக்கிறோம். நாம் இந்த உண்மையின் தூதுச்

செய்தியை உலகிற்கு கொண்டு சேர்க்க வேண்டும். எவ்வாறு? முதலில் நாம் நம்மை உண்மையாளர்களாக நிரூபிக்க வேண்டும். நபிமார்கள் தமது உண்மைக்கு தமது வாழ்விலேயே ஆதாரத்தை வழங்கினார்கள். அன்றாட நடவடிக்கைகளிலிருந்து இறுதிக்கட்ட வேலைகள் வரை தாம் ஒருபோதும் பொய் சொன்னதில்லை. எந்த மனிதத் தொடர்பிலும் பொய் கூறவில்லை. இந்த உண்மையைத் தான் நாம் நமது வாழ்வில் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். இதே பணி தான் நபிமார்களை ஏற்றுக் கொண்டவர்களின் பணியாகும். நபிமார்கள் எப்படி முன்னுதாரணம் காட்டுகிறார்களோ அதனைப் போன்று அவர்களை ஏற்றுக் கொண்டவர்களும் தமது வாழ்வை மக்களின் கண்களில் படுவதற்காக அழகானதாக்கி எடுத்து வையுங்கள். நமக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி நடக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. அந்த முன்மாதிரியின் படி நடந்தவாறு உண்மை என்ற நல்லொழுக்கத்தை எல்லாரையும் விட அதிகமாக நம்மிடம் மேற்கொள்ள வேண்டும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மிஷனை அப்போதுதான் முழுமைப்படுத்த முடியும். அப்போது தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை உலகிற்கு கொண்டு சேர்ப்பதில் வெற்றி பெற முடியும். ஆனால் உண்மையின் தகுதியைப் பெற நமது பணிகளில் எல்லா நிலைகளையும் உண்மையில் ஈடுபடுத்த வேண்டும். அப்போது தான் நமது சொல் செயல்களில் பரக்கத் வழங்கப்படும். நமது குடும்ப வாழ்வில் இருந்து நமது வெளிப்புற வாழ்வு வரை நமது சூழல் வரை நமது உண்மை முன்னுதாரணமாக விளங்கும். அப்போதுதான் நம் பேச்சில் பரக்கத் ஏற்படும். அப்போதுதான் நமது நல்லொழுக்கம், உண்மை, மற்றவரை அஹ்மதிய்யத் என்ற இஸ்லாத்தின் அருகில் கொண்டு வரும். இதற்காக முழு மூச்சாக முயற்சி செய்ய வேண்டும். உண்மையின் விஷயத்தில் நமது செயல்களை மெருகூட்ட வேண்டும். நாம் சிறு சிறு பொருளாதார பயனிற்காக பொய்யின் உதவியை நாடினால் நமது பேச்சுகளில் என்ன தாக்கம் ஏற்படும்? நான் ஏற்கனவே கூறி உள்ளேன். நாம் தவறான கணக்கு காட்டி அரசிடம், கவுன்சிலிடம் பொருளாதார பயனடைகிறோம். அல்லது நமது Tax (வரி)யை சரியாக செலுத்தவில்லை எனில் பிடிபடும் போது ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்படக் காரணமாகி விடுவோம். ஏனெனில் அஹ்மதியை ஒவ்வொருவருக்கும் தெரியும். இவர் அஹ்மதி. பிறகு அவப்பெயர் ஏற்பட்டு விட்டால் தப்லீக் என்னவாகும்? எந்த ஜமாஅத்துடன் உங்களுக்கு தொடர்புள்ளதோ அது சரியானது. அஹ்மதி தவறு செய்யமாட்டார்; சட்டத்தை மதிப்பார்; இவர்கள் மற்ற முஸ்லிம்களை விட்டு வேறுபட்டவர்கள். இவர்கள் பைஅத் செய்துள்ள மனிதரோ, உலகிற்கு வழிகாட்ட வந்தவர் என்பதை எப்படி நிரூபிப்பீர்கள்? இதனை நிரூபிக்க நாம் நமது அமல்களை சரியாக்க வேண்டும். சிறு சிறு விஷயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நாம் திருக்குர்ஆன், சுன்னத்தை அமல் செய்பவர்கள் என்று எப்படி நிரூபித்துக் காட்ட முடியும்? எனவே நாம் நம்மை சீர்படுத்த வேண்டும். இந்தப் பணியை பரப்புவதற்கு, ஜமாஅத்திற்கு நற்பெயர் ஈட்டித்தர முயற்சி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. பொய்யினால் நாம் பிடிபட்ட பிறகு நம்மை நாமே சிக்கலில் மாட்டிக் கொள்வது மட்டுமின்றி ஜமாஅத்திற்கும் இஸ்லாத்திற்கும் அவப்பெயர் ஏற்படுத்தவும் காரணமாகி விடுவோம். பிறகு நம்மில் சில இளைஞர்களிடம் தீய ஒழுக்கங்கள், சில தவறான செயல்கள், தீய சகவாசம், கணவன் மனைவி சண்டைகள், சிலவேளைகளில் விவகாரம் போலீஸ் வரை போய் விடுகிறது. அங்கு ஏதாவது ஒரு சாரார் உண்மைக்குப் புறம்பாகப் பேசுகின்றனர். எவ்வாறிருப்பினும் இதுவெல்லாம் ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்படக் காரணமானவையாகும். சமுதாயத்தில் தீய தாக்கம் ஏற்படுத்தி தப்லீகிற்கும் தடையாகி விடுகிறது. இது தவிர பொய் கூறும் பழக்கம் ஏற்பட்டால் ஜமாஅத்திற்கு உள்ளேயும் தமது விவகாரங்களில் பொய் துணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. பிறகு பொய்யினால் ஒவ்வொரு விஷயத்திலும் பரக்கத் இல்லாமல் போகிறது.

நான் ஏற்கனவே கூறியது போன்று வீடுகளில் குழந்தைகளிடம் தீய தாக்கம் ஏற்படுகிறது. இவர்களின் பேச்சில் தாக்கம் ஏற்படாது. சில குழந்தைகள் எனக்கே எழுதி விடுகின்றனர். எங்களது தந்தை வெளியில் மிகவும் கண்ணியமானவர். தொண்டு செய்பவர் என்று பிரபலமானவர். ஆனால் வீட்டில் எங்களுக்கு தான் தெரியும். தவறாக பேசுகிறார். உண்மையை விட்டு விலகியுள்ளார். இத்தகைய தந்தையால் குழந்தைகளிடம் என்ன தாக்கம் ஏற்படும்? பொய் பேசுகின்ற தாயினால் குழந்தைகளிடம் என்ன தாக்கம் ஏற்படும்? கேட்டால் பொய்யினை துணைக்கு எடுப்பார்கள். நாங்கள் நன்றாக உள்ளோம். எல்லாரும் நன்றாகவே இருக்கிறோம் என்பார்கள். இத்தகைய மக்களின் பேச்சுக்களால் தப்லீகில் தாக்கம் ஏற்படாது. இவர்களின் வீட்டில்

குழந்தைகளிடமும் இவர்களின் தாக்கம் ஏற்படுவதில்லை. இவர்களின் பிள்ளைகள் இவர்களைக் குறித்து தவறான தாக்கம் பெறுகின்றனர். பிறகு இவர்கள் வெளியில் போய் என்ன சீர்திருத்தப் போகிறார்கள்?

எனவே இதனை ஒவ்வொரு அஹ்மதியும் நினைவில் வைப்பது அவசியமாகும். நம்மிடம் உருவாகிற வளர்கிற விஷயங்கள் எத்தகையவை? பிறகு நாம் சொல்வது ஒன்று செய்வது ஒன்று என்று இருக்கும் மக்களுடன் சேர்ந்து விடுவோம். நாம் அஹ்மதிய்யத் உண்மை என்று முழங்குகின்றோம். அஹ்மதிய்யத்தே உண்மை இஸ்லாம். எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகையில்லை என்று முழங்குகிறோம். முதலில் நாம் நமது வீட்டிற்குள் அன்பை வழங்க வேண்டும். வீட்டுக்குள் உண்மையை நிலைநாட்ட வேண்டும். நமது உறவினர்களிடம் அன்பை வழங்க வேண்டும். நமது ஜமாஅத்தின் சகோதரர்களிடம் அன்பை வழங்க வேண்டும். தமது சுற்றுப்புறத்திற்கு அன்பை வழங்க வேண்டும். இவ்வாறு நமது அன்பு பரந்து விரிந்து கொண்டே செல்லும். பிறகு உண்மையினால் உண்மை பரவிக் கொண்டே செல்லும். இதுவன்றி நமது முழக்கம் வெற்று வாய் முழக்கம் ஆகும்; நாம் பொய் முழக்கமிடுபவர்களாவோம். வீட்டில் நிம்மதிக் குலைவு – நாம் மற்றவர்களைப் பார்த்து உண்மையைப் பெற்று உங்கள் நிம்மதிக் குலைவை அகற்றுங்கள் என்று அழைப்பு விடுக்கிறோம். நாம் மற்றவர்களிடம் சென்று அன்பை தப்லீக் செய்கிறோம். நமது அண்டை அயலாரிடம் தொடர்பு சரியில்லை. அவர்களுக்கோ நமது அன்பைப் பெற அதிக உரிமை தரப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உங்கள் மார்க்க சகோதரர்கள் உங்கள் அண்டை அயலார்கள் ஆவர். வீட்டோடு வீட்டைச் சேர்த்து கட்டுவதால் மட்டும் அண்டை அயலார் ஆகிவிடுவதில்லை. உங்கள் மார்க்க சகோதரர் உங்கள் அண்டை அயலார்கள் ஆவர். அவர்களின் உரிமையை வழங்குங்கள். நாம் உண்மையாளர்கள் எனில் நமக்கிடையே உள்ள தொடர்பையும் உறுதியாக இணைக்க வேண்டும். அதுவன்றி நமது தப்லீக் பரக்கத் அற்றதாகி விடும். அல்லாஹ் கூறுகிறான்: யா அய்யுஹல்லஸீன ஆமனூ லிமத் தகூலூன மாலா தஃப்அலூன். நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் செய்யாததை ஏன் சொல்கிறீர்கள்?(61:3)

உங்கள் அமல்கள் உங்கள் சொல்லுக்கு இணங்கியதாக இல்லையே. இது நயவஞ்சகத்தனமாகும். இதனால் பரக்கத் வளராது. இதனால் பரக்கத் இல்லாமையே உருவாகும். ஈமானை செயல், சொல் வித்தியாசத்தால் களங்கப்படுத்தி விடாதீர்கள். எந்தவொரு உண்மையான நபியின் உண்மைப் பேரன்பருடன் நீங்கள் தொடர்பு ஏற்படுத்தியுள்ளதாக வாதிக்கிறீர்களோ அந்த இணைப்பு உண்மையானதாக இருப்பதற்கு இந்த மனிதர் பொய்யர் என்று உங்களைப் பார்த்து யாரும் விரலை உயர்த்தாமல் இருக்க வேண்டும். இவர் பொய்யராக இருக்கிறார். இவரே பொய்யராக இருந்து கொண்டு உண்மையாளருடன் சேர்ந்திருப்பதாகக் கூறுகிறார். இவரோ பொய்யராக உள்ளார். பிறகு இவர் காட்டுகின்ற உண்மையாளரையும் இழிவாகப் பார்க்கப்படும்.

**எனவே தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

நம்முடன் சேர்ந்து நமக்கும் அவப்பெயர் ஏற்படுத்தாதீர்கள். எனவே நாம் நினைவில் கொள்ள வேண்டும். அஹ்மதிய்யத்தின் வெற்றிக்காக நாம் உண்மை என்ற ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டும். இஸ்லாத்தின் போதனை உண்மை என்பதில் சந்தேகமில்லை. திருக்குர்ஆன் உண்மை ஆனதாகும். இந்த போதனை கியாமத் வரை இருக்கப் போகிறது; இதில் சந்தேகமில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கடைசி ஷரீஅத்தின் நபி ஆவார்கள். எந்தவொரு புதிய ஷரீஅத்தும் எந்தவொரு புதிய உண்மையும் இனி இறங்கப்போவதில்லை. நுபுவ்வத்தின் எல்லா முழுமைகளும் அவர்களுடன் முடிவடைந்து விட்டன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் வாதம் உண்மையானது. அவர்களே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்த மஸீஹ் மவ்வூது (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) என்பதில் சந்தேகமில்லை. இஸ்லாத்தின் முன்னேற்றம் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்துடன் சம்பந்தப்பட்டது. ஆனால் இந்த முன்னேற்றத்தில் பங்கு பெற்று இந்த உண்மையை பரப்புவதற்கு அஹ்மதிகளுக்கும் பொறுப்பு உள்ளது. அதனை வழங்குவதற்கு நமது அமலை சரி செய்ய வேண்டும். எந்த போதனையை தப்லீக் செய்கிறோமோ அதற்கேற்ப நடக்க வேண்டும்.

எனவே நாம் இஸ்லாத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட வெற்றியில் நாம் பங்கு பெற வேண்டுமெனில் இன்ஷா அல்லாஹ் இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பருக்கு வாக்களித்துள்ள வெற்றியில் பங்கு பெற வேண்டும் எனில் பிறகு நாம் ஒவ்வொரு வினாடியும் நம்மை கணக்குப் பார்ப்பது அவசியமாகும். எந்த அளவுக்கு நாம் உண்மையாளர்களாக உள்ளோம். நமது வீட்டில், சுற்றுப்புறத்தில் ஜமாஅத் விவகாரங்களில், நமது தொழில் துறைகளில் நம்மை நாமே ஆய்வு செய்ய வேண்டும். நமது ஆய்வு நிம்மதியை குலைப்பதாக இருக்குமானால் நாம் கவலைப்பட வேண்டும். அஹ்மதிய்யத்தின் வெற்றி உறுதி என்பதில் சந்தேகமில்லை. இன்ஷா அல்லாஹ். அந்த வெற்றியை ஒவ்வொரு நாளும் நாம் பார்க்கவும் செய்கிறோம். ஆனால் உண்மையின் உரிமையை வழங்காதவருக்கு கவலைக்குரிய தருணம் இதுவாகும். அவர்கள் இந்த வெற்றியில் பங்கு பெறுவதிலிருந்து விலக்கப்படுவார்கள். எனவே இது கவலைப்படும் தருணமாகும். ஆய்வு செய்யும் இடமாகும். நாம் இந்த உண்மையைப் பெற்று எந்த அளவுக்கு நமது செயல்களைப் பொய்யிலிருந்து தூய்மையாக்குபவர்களாகி உள்ளோம் என்பது யோசிக்க வேண்டிய விஷயமாகும். எப்போதும் நாம் கவனத்தில் வைக்க வேண்டும். பொய் ஷிர்க் ஆகும். உண்மையை வெளிப்படுத்தி அதனை நிலைநாட்டுவதற்காக அஹ்மதிகள் தியாகங்கள் செய்கிறார்கள் என்றால் உண்மையில் அவர்கள் இணைவைத்தலுக்கு எதிராக தியாகங்கள் செய்கின்றனர். அவர்கள் ஒரே இறைவனின் ஆட்சியை உலகில் நிலைநாட்ட தியாகங்கள் செய்கின்றனர். அவர்கள் சர்வாதிகார ஆட்சி, அநியாயமான முல்லாக்களுக்கு எதிராக தியாகம் செய்கிறார்கள். உங்களுக்கு வாழ்வு வேண்டுமெனில், செல்வம் பாதுகாக்கப்பட வேண்டும் எனில், உங்கள் சந்ததிகள் நிம்மதியாக இருக்க வேண்டும் எனில் உண்மையை விட்டு விட்டு பொய்யை மேற்கொண்டு எம் பின்னால் வாருங்கள் என்று கூறுகின்றனர். நமது தியாகிகள் தமது இலக்கை நிறைவேற்றி விட்டார்கள். வெளியிலிருக்கும் அஹ்மதிகள் அம்மக்களோடு ஒப்பிடும் போது நிம்மதியாக வாழ்கிறார்கள். அவர்களது கடமை, அவர்கள் தமது உண்மையின் தரத்தை பொய் மரித்து விடும் அளவுக்கு உயர்த்த வேண்டும். நாம் நல்ல நிய்யத்துடன் இந்த இலக்கை அடைய முயன்றால் நிச்சயமாக பொய்யுக்கு மரணத்தைத் தவிர வேறு வழி இருக்காது.

அபூஸுப்யான் மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இதனையே கூறினார். நாங்கள் உண்மையாளராக இருந்தால் எமது வணக்கத்திற்குரியவை உண்மையானவையாக இருந்தால் – ஆற்றல் உள்ளவையாக இருந்தால் எந்த நிலையில் நீங்கள் மக்காவிலிருந்து வெளியேறினீர்கள். உங்களைத் தீர்த்துக்கட்ட எவ்வளவு முயற்சிகள் செய்தோம். அதன் விளைவாக இன்று நீங்கள் அமர்ந்திருக்கிற இடத்தில் நாங்களல்லவா இருந்திருக்க வேண்டும். எப்போதும் போல் நிரூபணமாகி விட்டது. நீங்கள் ஒவ்வொரு விஷயத்திலும் உண்மையை வெளிப்படுத்திக் கொண்டே இருந்தீர்கள். உங்கள் வாயிலிருந்து உண்மையைத் தவிர எதுவும் வெளி வந்ததில்லை. இன்று நிரூபணமாகி விட்டது. உங்கள் பிகடனமே உண்மையாகும். இதுவே உண்மை. இந்த உலகத்தின் இறைவன் ஒரே இறைவன்தான். அவனையே வணங்குங்கள். அவனுக்கு அடிமையாக இருப்பதன் உரிமையை வழங்குங்கள். அந்த இறைவனே உண்மையானவன் என்ற உங்கள் பிரகடனமும் உணமையாக இருந்தது. இஸ்லாத்தின் இறைவன் நிச்சயமாக உண்மையானவன் ஆவான். எனவே அபூஸுப்யான் மேலும் அறிவித்தார். நான் கலிமா சொல்கிறேன் என்று கூறி இஸ்லாத்தில் இணைந்தார்.

இதுவே உண்மையின் முன்மாதிரியாகும். இதனை உலகம் பார்த்தது. இதுவே கடும் எதிரிகளையும் உண்மையின் பக்கம் கொண்டு வந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உலகை பெரிதும் குழப்பம் நிறைந்த நிலையில் கண்டார்கள். உண்மையின் ஒளியால் அந்தக் குழப்பங்களை அகற்றி அம்மக்களை இறை மனிதர்களாக்கினார்கள். மக்காவின் குஃப்பார்களின் தற்பெருமையையும் பொய்யையும் இறைவாக்குறுதிகள் சிதைத்து விட்டன. இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இதே வாக்குறுதி தான் தரப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் வாக்குறுதி உள்ளது. அவர்கள் மூலமாக இஸ்லாத்திற்கு வெற்றி கிடைக்க உள்ளது. ஆனால் நாம் இறைவனுடையவர்கள் ஆகும் தேவை உள்ளது. உண்மையை நமது வாழ்வின் அங்கமாக்கும் தேவை உள்ளது. உண்மையின் மீது நிலை நின்றவாறு நமது ஈமானை வலுப்படுத்தும் தேவை உள்ளது. அப்போதுதான் இக்காட்சியைக் காண முடியும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின்

கையில், நாம் மார்க்கத்திற்கு உலகை விட முன்னுரிமை வழங்குவோம்; உண்மையை நிலைநாட்டுவோம்; பொய் மற்றும் ஷிர்க்கை அழிப்போம் என்று பைஅத் செய்து உறுதிமொழியும் எடுத்துள்ளோம். இன்று நாம் உண்மையை வெளிப்படுத்தி சத்தியத்தை நிலை நாட்ட வேண்டும். இதுவே அஹ்மதியின் கடமையாகும். நாம் முழுமையான உண்மையாளரின் உண்மை அடியாரின் உண்மையை பைஅத் செய்து அதனை உலகில் நிலைநாட்டப் போவதாக உடன்படிக்கை எடுத்துள்ளோம். உடன்படிக்கையை நிறைவேற்றுவது பற்றி அல்லாஹ் கேட்பான். இது மிகவும் கவலைப்பட வேண்டிய இடமாகும். இதனை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் நம்மை உண்மையின் முன்மாதிரியாக்கா விட்டால் நம்மால் ஒருபோதும் தவ்ஹீதை நிலைநாட்ட முடியாது; ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முழுமைப்படுத்தவும் பரப்பவும் வந்த அந்த உண்மையை நிலைநாட்டவும் முடியாது. அந்த உண்மை இன்றிலிருந்து 1400 ஆண்டுகளுக்கு முன் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிலைநாட்டியதாகும். ஆனால் முஸ்லிம்களின் நிலையால் அது இன்று உலகை விட்டு துடைக்கப்பட்டுள்ளது. ளஹரல் பஸாது பில் பர்ரி வல் பஹ்ரி – கரையும் கடலும் குழப்பத்தில் இருந்தது என்ற நிலைக்கு உலகம் வந்தது. அல்லாஹ் தனது அடியார்கள் மீது அளவற்ற கருணை காட்டுபவன் ஆவான். அவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக ஒரு ஜமாஅத்தை நிலைநாட்டி இந்த கவலையை அகற்ற ஏற்பாடு செய்தான். நுபுவ்வத்தை தொடரும் கிலாஃபத் மூலமாக ஒரு ஜமாஅத்தை நிறுவி உண்மையை நிலைநாட்டும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளான்.

எனவே ஒவ்வொரு நிலையிலும் குழப்பத்தை அகற்றி உண்மையை நிலைநாட்டிவிட முயற்சிப்பது ஒவ்வொரு அஹ்மதியின் வேலையாகும். அவர் இந்த ஜமாஅத்தில் தான் இருப்பதாகக் கூறுகிறார். நாம் இந்த குழப்பம் மற்றும் பொய்யை வீட்டிலிருந்து அகற்ற வேண்டும். இது வீட்டிற்கு குளறுபடி ஏற்படக் காரணமாக உள்ளது. நாம் இந்த குழப்பத்தையும் பொய்யையும் நமது வட்டாரத்தை விட்டு அழிக்க வேண்டும். இந்த குழப்பம் மற்றும் பொய்யை ஊரை விட்டு அகற்ற வேண்டும். இந்த குழப்பம் மற்றும் பொய்யை உலகை விட்டு அகற்ற வேண்டும். அதன் மூலம் உலகில் அன்பு, நேசம், சாந்தி, சமாதானம் நிலைநாட்டப்படும். அல்லாஹ்வின் அருளால் நாம் உலகிலிருந்து குழப்பங்களை அகற்ற வந்த ரஸூலை ஏற்றிருப்பவர்கள் ஆவோம். அன்னார் உலகிற்கு ஒரு ரஹ்மத் ஆக வந்தவர்கள் ஆவார்கள். அவர்களைப் பற்றி இறைவன் கூறியுள்ளான். வமா அர்ஸல்னாக்க இல்லா ரஹ்மத்தன் லில் ஆலமீன் – நாம் உம்மை இவ்வுலகிற்கு ஒரு ரஹ்மத் ஆக அனுப்பி உள்ளோம். உலகில் உண்மையை உயர்த்தி குழப்பத்தை அகற்றியதனால் தான் இந்த நபி (ஸல்) அவர்கள் ரஹ்மத்திற்கு காரணமானார்கள். இன்று நமது பொறுப்பு நாம் இந்த உண்மையாளர்களுள் உண்மையாளர் ரஹ்மத்துல் லில் ஆலமீன் அவர்களது சுன்னத்தை நிலைநாட்டுவோம். நம்மையும் உண்மையினை வெளிப்படுத்துபவராக்குவோம். உலகிற்கும் அந்த தூதை கொண்டு சேருங்கள். அந்நியரையும் இந்த உண்மையின் ஆயுதத்தால் வெல்லுங்கள். துப்பாக்கிக் குண்டுகள், துப்பாக்கித் தோட்டாக்கள் ஆகியவை வாழ்வை அழிப்பதற்கு காரணமானவையாகும்.

ஆனால் நாம் நமது அமலால் வீசுகின்ற உண்மை என்ற ஆயுதமோ வாழ்வை வழங்கும் ஆயுதமாகும். இந்த ஆயுதம் ஏந்தி ஒவ்வோர் அஹ்மதியும் இன்று வெளியேற வேண்டிய தேவை உள்ளது. நாம் உண்மையைப் பரப்ப இந்த ஆன்மீக ஆயுதத்தை பயன்படுத்தி நல்லியல்பு கொண்ட நன்மையைத் தேடுபவர்களைத் திரட்டி அவர்கள் மூலம் உண்மையின் சுவரை எழுப்புவோம். அதனை எந்தப் பொய்யான, ஷய்த்தானிய சக்தியும் வீழ்த்த இயலாததாக அமைய வேண்டும். பிறகு இந்த உண்மையின் ஒளி ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களுடைய ஒளியாகும். இந்த ஒளி இறை ஒளியின் பிம்பமாகும். இதனை உலகில் பரப்பிக் கொண்டே செல்வோமாக. இன்ஷா அல்லாஹ் உலகம் நபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் திரண்டு தவ்ஹீதின் காட்சியைக் காணட்டும். அல்லாஹ் நமக்கு தவ்ஃபீக் வழங்குவானாக.

இன்றும் ஒரு பரிதாபகரமான செய்தி உள்ளது. நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஜனாஸா தொழுவேன். நமது அஹ்மதி சகோதரர் பைஸலாபாத்தைச் சேர்ந்த நஸீம் அஹ்மத் பட் சாஹிப். இவர் முஹம்மது ரமளான்பட் சாஹிபின் மகன் ஆவார். இரு நாட்களுககு முன்பு பைஸலாபாத்தில் ஷஹீதாகியுள்ளார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்களது தாதா மூலமாக இவரது

குடும்பத்திற்கு அஹ்மதிய்யத் கிடைத்தது. அவரது பெயர் குலாம் முஹம்மது சாஹிப். இவருக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது காலத்தில் பைத் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. நஸீம் அஹ்மத் பட் சாஹிப் 1957 -ல் பைஸலாபாத்தில் பிறந்தார். இவர் பிறப்பு அஹ்மதி ஆவார். செப்டம்பர் 4 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று இவரது வீட்டிற்கு அடையாளம் தெரியாத சிலர் சுவரில் ஏறிக் குறித்து வந்து சுட்டு விட்டனர். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 3 ஆம் நாள் இரவில் இவர்கள் வந்தனர். வளாகத்தில் தூக்கிக் கொண்டிருந்தவரை எழுப்பி சுட்டனர். ஒரு குண்டு வயிற்றிலும் இரண்டு குண்டுகள் முதுகிலும் பட்டன. காயமுற்ற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். செப்டம்பர் 4 ஆம் நாள் காலை 9.00 மணிக்கு மருத்துவனையில் மரணமடைந்தார். ஷஹாதத்திற்கு முன்னர் குண்டடி வாங்கிக் கொண்டும் கூட சமாளித்தார். மனைவிக்கு பொறுமை மற்றும் தைரியமூட்டினார். இவரது சிறிய சகோதரர் வஸீம் அஹ்மத் பட் 1994-லும், இவரது பெரியப்பா மகன் நஸீர் அஹ்மத் சாஹிப் அல்லாஹ் ரக்கா சாஹிபின் மகன் கடந்த வருடமும் ஷஹீதாக்கப்பட்டுள்ளனர். அப்போதும் கூட அவர் மிகவும் பொறுமையை வெளிப்படுத்தினார். ஷஹாதத்தின் போது பட் சாஹிபின் வயது 54. ஒரு தொழிற்சாலையில் பணி செய்து வந்தார். நல்லொழுக்கம் உள்ளவர். துணிச்சல், தைரியம் உள்ளவர். ஜமாஅத் பணியில் பங்குபெறுபவர். சந்தாக்களை முறையாக தருபவர். பைத்துஸ் ஸிக்ர் மஸ்ஜித் வீட்டை விட்டு சிறிது தூரமாக இருந்த போதிலும் ஜும்ஆ தொழுகைக்கு பள்ளி சென்று தொழுது வருவார். ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் விசுவாசத்துடன் தொடர்பு கொண்டவர். எளிமையான சுபாவம். மனைவி குழந்தைகளுடன் நல்ல பிரியம் காட்டுபவர். படைப்பினங்களுடன் அனுதாபம் காட்டுபவர். இவரது நினைவாக இவரது மனைவி ஆஸியா நஸீம் சாஹிபா, இவர் தவிர நான்கு பெண் குழந்தைகள் உள்ளனர். சந்தூஷ்நாஷ் திருமணமானவர். அந்தாரா நூர் சாஹிபா இவரும் திருமணம் ஆனவர். ஸாரா கவ்ஸர் சாஹிபா இவரும் திருமணம் ஆனவர். ஷிமாயிலா கவல் 9வது படிக்கிறாள். வயது 15. ஸாபர் ரம்ஸான் என்ற மகன் 11 வயது; 4 வது படிக்கிறார். இவரது ஒரு மகன் சென்ற வருடம் தனது 22வது வயதில் நோயினால் மரணமடைந்தார். அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக. உறவினருக்கு பொறுமையை வழங்குவானாக. ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு இவர்களது ஜனாஸா தொழுகை நடைபெறும்.

(இரண்டாவது குத்பாவிற்கு நடுவில் ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்.)

இந்த ஷஹீதாக்கப்பட்ட இரு நாட்களுக்குப் பிறகு பைஸலாபாத்தில் நமது உமூரே ஆமா செயலர் மீதும் துப்பாக்கிச் சூடு செய்யப்பட்டுள்ளது. 4 குண்டுகள் பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று வரை கவலைக்கிடமான நிலை இருந்தது. இன்று அல்லாஹ்வின் அருளால் சிறு முன்னேற்றம் உள்ளது. அல்லாஹ் அவருக்கு முழுமையான விரைவான நலம் வழங்க துஆ செய்யுங்கள். குடல்கள் கணிசமாக துண்டாகி விட்டது. வயிற்றில் குண்டடி பட்டுள்ளது. கழுத்திலும் தோளிலும் குண்டுகள் உள்ளன.

அதுபோன்று நேற்று லாஹூரில் ஓர் அஹ்மதியை காரை மதித்து சுட முயற்சி செய்யப்பட்டது. ஒரு தோட்டா தவறி விட்டது. இனனொரு குண்டு செயலிழந்து விட்டது. எவ்வாறிருப்பினும் எதிர்ப்பு மிகவும் அதிகமாகி விட்டது. பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பாதுகாப்பில் வைப்பானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 09.09.2011**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**